TNRM100029362025



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.325/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கடலாடி காவல் நிலைய குற்ற எண்.81/2025. |
| **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | இசக்கி கணேஷ் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | முருகேசன் |
| 4. | வயது | 25/2025 |
| 5. | தொழில் | - |
| 6. | முகவரி | 9/249-1, கலைஞர் நகர், முப்புலிவெட்டி, ஓட்டபிடாரம், தூத்துக்குடி மாவட்டம். |
| 7. | சம்பவ நாள் | 06.10.2025 ம் தேதி 13.30 மணி |
| 8. | புகார் தேதி | 06.10.2025 ம் தேதி 20.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 07.10.2025 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | நிலையப்பிணை (07.10.2025) |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 27.10.2025 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 09.04.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | - |



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:31 +0530

<table>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>07.04.2026</td><td>07.04.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.04.2026</td><td>07.04.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>09.04.2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள்</td><td>M.P.No.1/2026 Petition U/s.359 BNSS filed and dismissed on 26.03.2026.</td></tr>
<tr><td>20.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு.S.சொக்கேசன்</td></tr>
<tr><td>21.</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு.S.நாகநாததுரை</td></tr>
<tr><td>22.</td><td>எதிரியின் கூற்று</td><td>எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்.</td></tr>
<tr><td>23.</td><td>தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள்</td><td>15.04.2026</td></tr>
<tr><td>24.</td><td>வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>15.04.2026</td></tr>
<tr><td>25.</td><td>தீர்ப்பின் முடிவு</td><td>முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என</td></tr>
</table>



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:34 +0530

| | | |
|---|---|---|
| | | முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 09.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.S.சொக்கேசன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.நாகநாததுரை அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. வழக்கின் புகார்தாரர் திருநெல்வேலி MM Sofa என்ற பெயரில் சொந்தமாக பர்னிச்சர் கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், புகார்தாரரின் மகனான வழக்கின் எதிரி புகார்தாரருடன் சேர்ந்து பர்னிச்சர் கடையில் தொழில் செய்து வரும்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:40 +0530

நிலையில், கடந்த 06.10.2025ம் தேதி காலை திருநெல்வேலியில் இருந்து இராமநாதபுரத்திற்கு பர்னிச்சர் ஏற்றி புகார்தாரருக்கு சொந்தமான TN 72 CA 3165 என்ற எண் கொண்ட Mahendra Bolero City Pickup என்ற வாகனத்தில் எதிரி ஓட்ட அவருடன் பர்னிச்சர் கடையில் வேலை செய்யும் உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சமீர் என்பவரும் வந்து கொண்டிருந்தபோது மதியம் சுமார் 13.30 மணியளவில் கடுகுசந்தை சத்திரம் to சாத்தாங்குடி விலக்கு ரோடு இடையே உள்ள பாலம் அருகே வந்தபோது புகார்தாரரின் மகன் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி ரோட்டின் வலது பக்கம் வாகனம் விழுந்ததில் சமீருக்கு வலது கன்னத்தில் சிராய்பு காயமும், வலது கால் சுண்டு விரலில் உள்காயமும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 27.10.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் 230 B.N.S.S Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 12.03.2026ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:45 +0530

அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் 263(1) B.N.S.S Act ன் கீழ் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து 263(2) B.N.S.S Act ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு 265 B.N.S.S Act-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டதாக பிரிவு 359 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டிற்குள்ளாவதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 7 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் அ.சா.2 ஆகவும், நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். பார்வை மகஜர் சாட்சிகள், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 8 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:49 +0530

சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 06.10.2025ம் தேதி அசா.1ன் மகனான ஆஜர் எதிரி இசக்கிகணேஷ் திருநெல்வேலியிருந்து இராமநாதபுரத்திற்கு மகேந்திரா பொலிரோ பிக்கப் வாகனத்தில் பர்னிச்சர் ஏற்றி செல்லும்போது அ.சா.1 அவரது மகனுடன் வேலை செய்த உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சமீர் என்பவரும் உடன் சென்றபோது மதியம் சுமார் 01.30 மணியளவில் கடுகுசந்தை சத்திரம் அருகே அ.சா.1ன் மகன் சென்ற வாகனம் நிலைதடுமாறி வலது பக்கம் விழுந்ததில் அ.சா.1ன் மகனுக்கும், சமீர் என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டதாகவும், அ.சா.1ன் மகன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1 சென்று பார்த்ததாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது தான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், வழக்கின் சம்பவ காலத்தில் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெரியாது என்றும், அந்த விபத்திற்கு ஓட்டுநர் காரணம் இல்லை என்றும், மற்ற விவரங்கள் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 06.10.2025ம் தேதி 20.00 மணிக்கு கடலாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.முகில்அரசன் அவர்கள்


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:55 +0530

நிலையப்பொறுப்பில் இருந்தபோது ஒட்டப்பிடாரம் கிராமத்தை சேர்ந்த முத்தையா மகன் முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.2) பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.81/2025 BNS பிரிவுகள் 281, 125(a)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் 07.10.2025ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திக் மற்றும் திருமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளார். என்றும், பின்னர் இந்த வழக்கின் எதிரியை 07.10.2025ம் தேதி கடலாடி காவல் நிலையம் முன்பு கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் ஜாமீனில் நிலையப்பிணையில் விடுவித்துள்ளதாகவும், இந்த வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 72 CA 3165 என்ற பதிவெண்ட கொண்ட Mahendra Bolero City Pickup வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்து அவரிடமிருந்து மேற்படி வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.6) பெற்றுள்ளார் என்றும், மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த கடலாடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அவினாஷ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், மருத்துவர் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளதாகவும், மேற்படி காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு (அ.சா.ஆ.7)

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:04:58 +0530

என்றும், பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) BNS என்பதிலிருந்து 281, 125(b) BNS வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.8) தாக்கல் செய்துள்ளார் **என்றும்,** வழக்கு விசாரணை முடித்து 25.10.2025ம் தேதி வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 125(a) BNS-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) B.N.S.S. Act ன் கீழ் 09.04.2026ம் தேதியன்று வினவிய போது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

9. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## <u>தீர்வு</u>

10. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:01 +0530

செய்தார். எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1 ம், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத்தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

11. இவ்வழக்கில் அ.சா.1 ம், எதிரியும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக பிரிவு 359 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் 3 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

12. நிலைய சார்பு ஆய்வாளரான அ.சா.3 அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, கடந்த 06.10.2025 ம் தேதி காலை திருநெல்வேலியில் இருந்து இராமநாதபுரத்திற்கு பர்னிச்சர் ஏற்றி புகார்தாரருக்கு சொந்தமான TN 72 CA 3165 என்ற எண் கொண்ட Mahendra Bolero City Pickup என்ற வாகனத்தில் எதிரி ஓட்ட அவருடன் பர்னிச்சர் கடையில் வேலை செய்யும் உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சமீர் என்பவரும் வந்து கொண்டிருந்தபோது மதியம் சுமார் 13.30 மணியளவில் கடுகுசந்தை சத்திரம் to

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:05 +0530

சாத்தாங்குடி விலக்கு ரோடு இடையே உள்ள பாலம் அருகே வந்தபோது புகார்தாரரின் மகன் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி ரோட்டின் வலது பக்கம் வாகனம் விழுந்ததில் சமீருக்கு வலது கன்னத்தில் சிராய்ப்பு காயமும், வலது கால் சுண்டு விரலில் உள்காயமும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

13. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு அளித்த போதிலும் தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 06.10.2025 ம் தேதி அசா.1 ன் மகனான ஆஜர் எதிரி இசக்கிகணேஷ் திருநெல்வேலியிருந்து இராமநாதபுரத்திற்கு மகேந்திரா பொலிரோ பிக்கப் வாகனத்தில் பர்னிச்சர் ஏற்றி செல்லும்போது அ.சா.1 அவரது மகனுடன் வேலை செய்த உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சமீர் என்பவரும் உடன் சென்றபோது மதியம் சுமார் 01.30 மணியளவில் கடுகுசந்தை சத்திரம் அருகே அ.சா.1 ன் மகன் சென்ற வாகனம் நிலைதடுமாறி வலது பக்கம் விழுந்ததில் அ.சா.1 ன் மகனுக்கும், சமீர் என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டதாகவும், அ.சா.1 ன் மகன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1 சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:08 +0530

நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 மற்றும் 2 தவிர சம்பவ சாட்சிகள், காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரி தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார் என்று அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:12 +0530

சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

17. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் தேதி புதன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | முருகேசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | சமீர் |
| அ.சா.3 | நாகராஜன் (சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 06.10.2025 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| அ.சா.2 | 06.10.2025 | புகார் மனு |
| அ.சா.3 | 06.10.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.4 | 07.10.2025 | பார்வை மகஜர் |
| அ.சா.5 | 07.10.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.6 | 14.10.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.7 | 06.10.2025 | காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு |
| அ.சா.8 | 25.10.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.04.15 17:05:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**குறிப்பு:-**

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிள் பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.